# H1 தமிழ் மொழி (8623)

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

2012-ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பொதுக் கல்விச் சான்றிதழ் மேல் நிலை பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர்கள் ஏற்கனவே அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். மேற்கண்ட நோக்கத்தை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும்.

**கேட்டல்**

1 எழுத்து அல்லது பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டு அவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல்

**பேசுதல்**

1 ஒரு தலைப்பையொட்டிப் பொருத்தமான கருத்துகளை நிரல்படவும் தர்க்க ரீதியாகவும் எடுத்துக்காட்டுகளுடனும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

2 செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேச்சுத் தமிழிலோ எழுத்துத் தமிழிலோ பொருத்தமான சொல்வளத்தைப் பயன்படுத்திக் கருத்துகளைக் கூறுதல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

1 கருத்துப் பரிமாற்றச் சூழல்களில் ஒரு தலைப்பையொட்டிய பொருத்தமான கருத்துகளைச் சரளமாகவும் தெளிவாகவும் பகிர்ந்துகொண்டு உரையாடுதல்

2 ஒருவர் கூறுவதைச் செவிமெடுத்துத் தக்கவாறு மறுமொழி கூறுவதோடு ஈடுபாட்டுடன் கலந்துரையாடிக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்

3 கலந்துரையாடலின்போது கருத்து வளர்ச்சி தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் அமைவதோடு பொருத்தமான சொல்வளத்தையும் தெளிவான மொழிநடையையும் பயன்படுத்துதல்

**படித்தல்**

1 பலதரப்பட்ட பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

**எழுதுதல்**

1 கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புகளுக்கு ஏற்ற கருத்துகளையும் தமது எண்ணங்களையும் சரியாகவும் பொருத்தமாகவும் விளக்கி எழுதுதல்

2 தெளிவான மொழிநடையில் பொருத்தமான பலதரப்பட்ட சொற்கோவையைப் பயன்படுத்தி நிரல்படவும் கருத்தமைப்போடும் பத்தி அமைப்போடும் கட்டுரையை எழுதுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

இப்பாடம் மொத்தம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

### <u>வினாத்தாள் 1</u>

இத்தாள் '**பகுதி 1**', **'பகுதி 2**' ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**'பகுதி 1' (கட்டுரை)**

இப்பிரிவில் கொடுக்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதுதல் வேண்டும். கட்டுரைத் தலைப்புகளும் கருத்து விளக்கப்படமும் இப்பகுதியில் இடம்பெறும். கருத்து விளக்கப்படக் கட்டுரையில் 3 அல்லது 4 படங்கள் இடம்பெறும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் கட்டுரை எழுத வேண்டும்.

**'பகுதி 2' (கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்)**

இப்பகுதியில் 'அ', **'**ஆ', 'இ' ஆகிய பிரிவுகள் இருக்கும்.

**'அ' பிரிவு (மொழி மரபும் பயன்பாடும்)**

இப்பிரிவில் சொற்புணர்ச்சி, மரபுத்தொடர்கள்/இணைமொழிகள் ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். அவை அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

**'ஆ' பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியில் பத்துக் கோடிட்ட இடங்கள் இடம்பெறும். கொடுக்கப்பட்ட சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களில் எழுத வேண்டும்.

**'இ' பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா சுருக்கி வரையும் வகையிலும் மற்றொரு வினா சொற்பொருளை ஒட்டியும் அமையும். வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் எழுத வேண்டும்.

<u>வினாத்தாள் 2</u>

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது. அவை வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் என்பன.

**வாய்மொழித் தேர்வு**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது:

1 வாய்மொழிப் படைப்பு
2 ஒளிக்காட்சியைப் பற்றிய உரையாடல்

தேர்வில் கலந்துகொள்பவர் வாய்மொழிப் படைப்புக்கான தலைப்பைத் தேர்ந்தெடுத்துத் தயாரிப்பதற்கும் ஒளிக்காட்சியைப் பார்ப்பதற்கும் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

**வாய்மொழிப் படைப்பு**

'திரைப்படக்கலை - ரசனையும் திறனாய்வும்', 'இணையமும் ஊடகங்களும்' ஆகிய இரு விருப்பப்பாடத் தலைப்புகள் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் அடிப்படையில் கொடுக்கப்படும் இரு விருப்பப்பாடத் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் அதையொட்டி ஒரு படைக்க வழங்க வேண்டும். அப்படைப்பு இரண்டு நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும். கருத்துகளின் பொருத்தம், கருத்துகளை விவரிக்கும் திறன், படைப்பின் சரளம், மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**ஒளிக்காட்சியைப் பற்றிய உரையாடல்**

தேர்வில் கலந்துகொள்பவருக்கு ஓர் ஒளிக்காட்சி ஊக்கக்கூறு (video stimulus) காண்பிக்கப்படும். அந்த ஒளிக்காட்சி 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். அதைப் பார்த்த பின்னர், அந்த ஒளிக்காட்சி தொடர்புடைய தலைப்பில் தேர்வாளரோடு கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும். கருத்துகளின் பொருத்தம், கருத்துகளை விவரிக்கும் திறன், மொழியின் பொருத்தப்பாடு, உரையாடலின் சரளம், உரையாடலில் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**கேட்டல் கருத்தறிதல்**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் இரண்டு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னரே வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கேட்டல் கருத்தறிதல் தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள்.

## 3. தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேல் நிலைத் தேர்வு**
**தமிழ் மொழி**

| தாள் | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(3 மணி) | **பகுதி 1**<br><br><u>கட்டுரை</u><br>[300 சொற்களுக்குக் குறையாமல்] | கட்டுரை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **(30%)**<br><br>60 |
| | **பகுதி 2**<br><br><u>கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்</u><br><br>**<u>‘அ’ பிரிவு</u>**<br>A1 சொற்புணர்ச்சி | சுயவிடை வினாக்கள் | 5 | **(40%)**<br><br>10 |
| | A2 இணைமொழி/மரபுத்தொடர் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 10 |
| | **<u>‘ஆ’ பிரிவு</u>**<br>B3 முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 10 | 20 |
| | **<u>‘இ’ பிரிவு</u>**<br>C4 சுயவிடைக் கருத்தறிதல் (சொற்பொருள் வினாக்கள் உட்பட) | சுயவிடை வினாக்கள் | 5 | 40 |
| 2 | **வாய்மொழியும் கேட்டல் கருத்தறிதலும்**<br><br>**<u>வாய்மொழி</u>**<br>1 வாய்மொழிப் படைப்பு<br><br>2 ஒளிக்காட்சி பற்றிய உரையாடல் | சுயவிடை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்)<br><br>1 | **(30%)**<br><br>20<br><br>30 |
| | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>** | தெரிவுவிடை வினாக்கள் | 10 | 10 |